8th August 1966]

எவ்வளவு கிடைக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியென்ருல் எவ்வளவு கிடைக்கும் என்று மதிப்பீட்டுக் கணக்கு சொல்கிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்தத் தகவல் இப்போது என்னிடமில்லே.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) FIRE ACCIDENTS AND CRIMES IN USILAMPATTI.

MR. SPEAKER : Sri P. K. Mookiah Thevar has given notice of an adjournment motion.

திரு. பி. கே. மூக்கையாத் தேவர் : கனம் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் கண்மாய்கரையில் நேற்று பிற்பகல் ஒன்றரை மணிக்கு தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக 20 கடைகளுக்கு பெருத்த சேதமும், நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. இது தற்செயலாக நடைபெற்ற சம்பவம் அல்ல. சென்ற சில வாரங்களாகவே உசிலம்பட்டி கிராமத்தில் தீ வைத்தல், எதிர்க்கட்சி கூட்டங்களை பலாத்காரமாகக் கலைத்தல், கல் எறிவது, பயங்கரமான ஆயுதங்கள் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர்களைத் தாக்குதல் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே இதைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, உசிலம்பட்டியில் ஒருசில மாதங்களுக்குள் 10 கொலைகள் நடந்திருக்கின்றன. இதுவரை ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்தார்கள் என்று டெப்புடி சூப்பிரன்டென்டென்ட் அவர்கள் கண்டுபிடித்தும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த விவரங்களையெல்லாம் நான் ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன். துரிதமாக நடவடிக்கை இல்லாத காரணத்தினுல், இந்தச் சம்பவங்களால் பொது மக்கள் பீதி அடைந்திருக்கிருர்கள். உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சபையை ஒத்தி வைத்து இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்கவேண்டும் என்பதற்காக ஒத்தி வைப்புப் பிரேரணையை கொடுத்திருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் விவரித்துள்ளதிலிருந்து இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனுல் அவர்கள்—நாளைக்கு கடைசி நாள்—இந்தத் தொடர்க் கூட்டத்திலேயே, நாளைக்கு விடை அளிக்கக் கூடிய வகையிலே, ஒரு ' கால் அட்டென்ஷன் ' நோட்டீஸ் கொடுத்தால், இப்பொழுதே எழுதிக் கொடுத்தால் எவ்வளவு தகவல் கிடைக்குமோ அவைகளைப் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுக்கலாம். ஆனுல், இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[8th August 1966

MR. SPEAKER : The hon. Member can given a ' Call Attention Notice ' under Rule 41 of the Assembly Rules in regard to this matter. So, the motion is disallowed.

(2) IMPLICATION OF SUPREME COURT'S JUDGMENT *re*. PAYMENT OF BONUS ACT, 1964.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரால் பிறப்பிக்கப்பட்டிருக்கும் போனஸ் சட்டத்தைப் பற்றி இந்தியத் தலைமை நீதி மன்றம் அண்மையில் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பின்படி 2-3 பிரிவுகள் செல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னையிலே நம் அரசாங்கத்திற்கு என்ன பங்கு இருக்கிறது என்பதை இங்கே விவரிக்கவேண்டும். இது மத்திய சர்க்கார் இயற்றிய சட்டம் என்றாலும், இந்த சப்ஜெக்ட், 'லேபர்' என்ற சப்ஜெக்ட், 'கன்கரன்ட் சப்ஜெக்ட்' ஆக இருப்பதால் இந்த சர்க்காருக்கும் பொறுப்பு இருக்கிறது. அதோடு கூட, மத்திய சர்க்கார் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைப் பற்றி மாநில சர்க்கார்களின் அபிப்பிராயத்தைப் பற்றித் தெரிந்ததற்குப் பின்னால் இது பற்றியத் திருத்தங்கள் செய்யலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். நம் மாநில சர்க்கார் இந்தத் தீர்ப்பைப் பரிசீலித்ததா, இந்தத் தீர்ப்பின் விளைவாகத் தொழிலாளர்களுக்கு என்ன என்ன பாதகங்கள் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி தொழிலாளர் தலைவர்களைக் கூப்பிட்டுப் பேசி விவாதம் செய்ததா, அதில் சர்க்கார் கருத்து என்ன என்று சபை அறிந்துகொள்ள வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் போனஸ் ஆக்ட்டைப் பற்றிய சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பைப் பற்றி கவனத்தை ஈர்க்க இந்தச் சபையை ஒத்தி வைத்து இதை விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுவதற்காக நான் ஒத்தி வைப்பு பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்புக் கொடுத்தார்கள். அதையொட்டி ஒரு அவசரப் பிரேரணை என்பது முறையானதல்ல. இந்த அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கமும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இப்போது சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின் பேரில் என்ன செய்வது, தொழிலாளர்களுக்கு எத்தகைய நிவாரணம் அளிப்பது, சட்டத்தைமாற்ற வேண்டுமா என்பதெல்லாம், மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கம் ஆக இரண்டு அரசாங்கங்களின் பரிசீலனையில் இருக்கின்றன. இது எப்படியும் அவசரப் பிரேரணையாக விவாதிப்பதற்குரியது அல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion. So the motion is disallowed.

III.—CALLING ATTENTION TO SCARCITY OF RICE IN THANJAVUR DISTRICT.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கனம் தலைவர் அவர்களே. தஞ்சாவூர் மாவட்டம் முழுவதிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் அரிசி கிடைப்பது அரிதாய் உள்ளதும், அதனால் அரிசி